1978 செப்டம்பர் 7]

அவர்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைப்பது மிக சிரமமாக இருப்பதால், அப்படியே கிடைத்தாலும் அதிக விலைக்கு வாங்க வேண்டிய அவல நிலை இருப்பதாகவும் தெரியவருகிறது. அதையும் போக்க இந்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கேள்வி ஜெரேனியம் அதிக அளவில் பயிரிடப்படுமா என்பது பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற விவரங்களுக்குத் தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துச் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, ஜெரேனியத்தை இப்போது சிங்கோனா டிப்பார்ட்மெண்ட் பயிரிட்டு வருகின்றதாகச் சொன்னார்கள். இதை மாற்றி இந்தோ-ஜெர்மனித் திட்டத்தின் கீழ் உள்ள இலாகா மூலமாக இதைச் செய்வதற்கு அரசு பணிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்த யோசனையையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் இடைநிலைப் பள்ளிகள்

* வினா 67—திரு கோ. இளங்கோவன், திரு. மு. அம்பிகாபதி, திரு. என். கிட்டப்பா.— மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாநிலம் முழுவதும் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளில் Higher Secondary Education-க்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது?

(ஆ) வசதி செய்யப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் அரசு உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) மாநிலம் முழுவதும் 874 உயர் நிலைப்பள்ளிகளில் மேல் நிலைப் பள்ளிக்கல்வி (ஹையர் செகண்டரி) தொடங்க இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளது, இவைகள் தவிர 24 ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலும், 18 மெட்ரிக்குலேஷன் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேல்நிலைப்பள்ளிக் கல்வி தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ள அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை 413.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, தலைமை ஆசிரியர்கள் நியமனத்தில் தனியார் மேல்உயர்நிலைப்பள்ளிகளிலும் அரசு மேல் உயர்நிலைப் பள்ளிகளிலும் ஒரேவிதமான விதிமுறைகள் கையாளப்படுகின்றதா? 'ஏ' விங்க் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பதவிகள் காலியாக இருந்தால் அதில் 'பி' விங்க் ஆசிரியர்களை நியமிக்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா? தெரியுமென்றால் இதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் நீடிக்கின்ற வகையில் அவர்களின் விருப்பத்திற்கேற்ப அனுமதி தந்திருக்கிறோம். 'எ' விங் என்றும் 'பி' விங் என்றும் வித்தியாசம் பாராமல் நியமனம் இருக்க வேண்டும் என்று உத்தரவு அளித்திருக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி: இப்படித் துவக்கப்பட்ட கல்வி முறைக்குத் தேவையான உபகரணங்கள் அந்த மாணவர்களுக்கு வழங்கப்படாததின் காரணமாகச் சரியாகக் கல்வி அளிக்கப்படவில்லை என்கின்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படியானால் இதை நல்ல முறையில் பரிசீலித்து அவர்களுக்குத் தேவைப்படுகின்ற உபகரணங்களை வழங்குவதற்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, போதிய அளவில் உபகரணங்களை வழங்கி நல்லமுறையில் கல்வியைப் புகட்டுவதில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலை பள்ளிகளாக மாற்றுவதற்கு எந்தெந்த விதிமுறைகள் கையாளப்படுகின்றன? இதற்கான வசதியுள்ள பள்ளிகள் 413 என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தவிதமான வசதியுள்ள நகராண்மைக்கழகப் பள்ளிகள் எத்தனை என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, போதுமான அளவில் பள்ளிகள் திறக்கப்படவேண்டும் என்கின்ற அடிப்படையில் நிறைய பள்ளிகளைத் திறந்து இருக்கிறோம். மாநிலம் முழுவதும் பரவலாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையிலும் ஆங்காங்கு இருக்கின்ற பள்ளிகளில் ஓரளவு இருக்கின்ற வசதியைப் பார்த்தும், மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தும் மேல்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. நகரசபை பள்ளிகளின் எண்ணிக்கையின் விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக கல்லூரி ஆசிரியர்கள் யாரும் வேலையிழக்க மாட்டார்கள் என்று மார்ச் மாதம் அரசு அறிவித்தது. ஆனால் இப்போது 220 ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் தடையுத்தரவையும் மீறி உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மேல்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தியதின் காரணமாக ஆசிரியர்கள் பணிநீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்கின்ற உத்தரவாதத்தை இனிமேலாவது கொடுக்க அரசு முன் வருமா?

1978 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகள் ஏற்பட்டதின் காரணமாகக் கல்லூரி ஆசிரியர் களுக்கு பாதிப்பு என்பது அடுத்த ஆண்டிலிருந்து தான் வரும். அந்த நிலைமை வருகின்ற போது, அந்த ஆசிரியர்களுக்கு எல்லாம் போதிய பாதுகாப்பு தருவதாக உறுதியைத் தந்திருக்கிறோம். இப்போது வேலையிழந்திருக்கின்ற ஆசிரியர்கள் பிரச்னையிலும் இப் போதுள்ள நிலைமைக்கு ஏற்ப சர்க்கார் ஒரு புதிய உத்தரவைப் போட இருக்கிறது. பள்ளிகளுக்கு எல்லாம் போடப்பட்டு விட்டது. மேலும் இதற்கான நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, மேல்நிலைக் கல்வி பயிலுகின்ற பள்ளிக்கூடங்களில் ஏறக்குறைய 80 மாணவர்கள் வரையில் சேர்க்கப்படுகின்றதன் விளைவாக, மாணவர்களுக்குத் தரமான கல்வி போதிப்பதற்கு இயலாத வகையில் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், பையாலஜி போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை என்று திருச்சியிலுள்ள ஒவ்வொரு பள்ளிக் கூடங்களிலும் சொல்லுகின்றார்கள். அதற்கும் உடனடியாக சீக்கிரத்தில் ஆசிரியர்களை அங்கே நியமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் 11-வது வகுப்பிலே மீதமுள்ள ஆசிரியர்களை நியமிக்க ஆங்காங்கே அனுமதித்திருக்கிறோம். புதிய தகவல்களின் படியும், ஆங்காங்கே ஆசிரியர்களைப் போட்டிருக்கிறோம். ஒவ்வொரு வகுப்பிலும் 80 மாணவர்களுக்கு மேல் படிக்கின்றார்கள் என்பது உண்மைக்கு முரணானது. அப்படியிருந்தால், அங்கே இரண்டு, மூன்று வகுப்புகள் இருக்கும். எனவே, அத்தகைய புகாருக்கு இடமில்லை என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி ஆரம்பித்து 3 மாதங்கள் ஆகியும் நெல்லை மாவட்டத்திலே ஆங்கில, தமிழ் மீடியங்களுக்கு இதுவரையில் புத்தகங்கள் சரியாக வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, புத்தகங்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் ஒரு வாரத்தில் முழுமையாக அனுப்பப்பட்டு விடும்.